Registered as a Newspaper

When, only
The best is
Good Enough

By
Solide Pumps

# உதயன்

விலை ரூ 2.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

தரமானதே சிறந்தது எனறுல்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடு ஐப்பசி மீ 01 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1049 ற. அவ்வல் பிறை 05 (17 - 10 - 1988) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 211

துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும்

## இளைஞர் மீது ஒரேநாளில் 3முறை கொலை முயற்சி

யாழ்ப்பாணம் அக் 17
துப்பாகிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்சாகி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட ஒருவரை ஆஸ்பத்திரியில் வைத்து கத்தியால் குத்தி கொலை செய்ய மேலும் இரு தடவைகள் முயற்சி எடுக்கப்பட்டன.

ஒரே நாளில் மூன்று தடவைகள் கொலை முயற்சிக்கு இலக்கான இந்த நபர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இந்தக் கொலை முயற்சி சம்பவங்கள் யாழ்ப்பாணத்திலும் யாழ். ஆஸ்பத்திரியிலும் நேறறு இடம் பெற்றன.

நேற்று காலை 11 30 மணியளவில் யாழ் நாவலர் வீதி – கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அண்மையில் வைத்து வண்ணார் பண்ணையைச் சேர்ந்தஒர் இளைஞர் மீதுதுப்பாக்கிப் பிரயோகம் மேற் சொள்ளப்பட்டது காலிலே பல

[6-ஆம் பக்கம் பார்க்க]

## சிறிமாவின் பெயரில் போலி ஒலிப்பதிவு நாடா!

கொழும்பு, அக் 17
திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காபேசிய பேச்சுப் போன்று பதிவு செய்யப்பட்ட ஒலிப் பதிவு நாடா ஒன்று கொழும்பில் பரவலாக விநியோகிக்கப்பட்டு வருவதாக சுதந்திரக் கட்சி குற்றஞ்சாட்டியிருக்கிறது.

மலைநாட்டுச் சிங்களவர், கீழ்நாட்டுச் சிங்களவர் என்ற பேதத்தைக் கிளறுவதாக இந்த ஒலிப்பதிவு நாடாப் பேச்சு அமைந்துள்ளதாம்.

தன் மீது சேறு வீசும் முயற்சி இது என்றும் இந்த போலி கஸட் பற்றி விசாரணை நடத்தும்படி பொலீஸாரைக் கேட்கவிருப்பதாகவும் திருமதி பண்டாரநாயக்கா கொழும்புச் செய்தியாளருக்குத் தெரிவித்தார். (உ-எ)

சாதாரண பிரசை கேட்டாலும்

## உயர் பதவி வகிப்போர் சொத்துக்களை வெளியிட வேண்டும்

### சட்டத்தைத் திருத்த அரசு முடிவு

அரசாங்கத்தில் உயர் பதவி வகிப்போரின் சொத்துக்கள் பற்றி பிரகடனம் செய்யும் சட்டத்தை திருத்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

சாதாரண ஒரு பிரசை கோருமிடத்து சம்பந்தப்பட்ட- உயர் பதவி வகிப்போர்- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வைத்திருக்கும் சொத்து உடமைகளை காலத்துக் காலம் வெளிப்படுத்தும் கட்டாயத்தை இத் திருத்தம் ஏற்படுத்துகிறது.

தற்போதுள்ள சட்டம், சாதாரண பிரசைக்கு இந்த உரிமையை அளிக்கவில்லை. (உ-எ)

## யாழ் மணிக்கூட்டு வீதியில் சூடுபட்டு ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம் அக் 17
நேற்று காலை 12.30 மணியளவில் யாழ் மணிக்கூட்டு வீதிப்பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றில் ஒருவர் பலியானர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து நகரில் பதட்டம் நிலவியது.

சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த அமைதிப்படையினர் பலியானவரின் உடலை எடுத்துச் சென்று யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

நேற்றுமாலையில் இவரது சடலம் அடையாளம் காணப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பலியானவர் உரும்பராயைச் சேர்ந்த சிங்கராசா சந்திரன் என அடையாளம்காணப்பட்டுள்ளது. (உ-9)

அம்பாறை மாவட்டத்தில்

## 8 உதவி அரச அதிபர்கள் பதவி விலக விருப்பம்

கொழும்பு, அக் 17
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எட்டு உதவி அரச அதிபர்கள், ஒரு மேலதிக அரசு அதிபர் ஆகியவர்கள் பதவி விலக விருப்பம் தெரிவித்து உள்நாட்டமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 16 உதவி அரச அதிபர்கள் உள்ளனர் வன்செயலால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய பகுதிகளில் உள்ள அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புச் சலுகைகள் தங்களுக்கு வழங்கப்படவில்லை என்பதே இவர்களின் குற்றச்சாட்டு எனக் கூறப்படுகிறது. (உ-எ)

★ யாழ் மாவட்டத்திலுள்ள

# பாடசாலைகளை திறப்பது பற்றி புதனன்று முடிவு

## அதிபர்கள், அதிகாரிகளுடன் பணிப்பாளர் ஆலோசிப்பார்

யாழ்ப்பாணம், அக்டோபர் 17
யாழ். மாவட்டப் பாடசாலைகளை மீளத் திறப்பது பற்றி ஆராய்வதற்காக நாளை மறுதினம் (புதன்கிழமை) விசேட கூட்டம் ஒன்றை யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் கூட்டியிருக்கிறர்,

கொத்தணி அதிபர்கள், வட்டாரக் கல்வி அதிகாரிகள் மற்றும் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் இக் கூட்டத்தில் தற்போதைய சூழ்நிலை பற்றி அவர்களின் கருத்தை கல்விப் பணிப்பாளர் கேட்டறிவார். அதன் பின்னரே பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்து அவர் முடிவு செய்வார் எனத் தெரியவருகிறது.

புதன்கிழமை நடைபெறும் கூட்டத்தில் சகல வட்டாரக் கல்வி அதிகாரிகளையும் சொத்தணி அதிபர்களையும், பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அதிகாரியையும் பங்கு பற்றுமாறு கல்விப் பணிப்பாளர் திரு.வெற்றிவேலு சபாநாயகம் கேட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் பாடசாலை ஒழுங்கு, பொதுப் பரீட்சைகள் சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெறும் என்று கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதால் ஜீ சீ ஈ சாதாரணதரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை உட்பட பொதுப்

[6ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



கறுப்புப் பணம் வைச்சிருக்கிற பெருச்சாளியள் அதுகளை வெளி வெளியா தங்கடை பெயரிலையே வைச்சிருக்கப் போகுதுகள் ... ...!

### சிறுமி காயம்

யாழ்ப்பாணம் அக் 17
நேற்றுத் திருநெல்வேலிப் பகுதியில்இடம்பெற்றத் துப்பாக்கி வெடிச் சம்பவம் ஒன்றில் சிறுமி ஒருவர்காயமடைந்தார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த ஜெயனிசதானந்தன் (8 வயது)என்ற சிறுமியே கையில்காயமடைந்தார்.

படையினரின் துப்பாக்கி தவறுதலாகவெடித்ததினல் இச் சிறுமி காயமடைந்ததாகக் கூறப்பட்டது. (உ-9)

### சுபநேரம்

17 - 10 - 1988
ஐப்பசி – 1
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12-02முதல் 01-32வரை
ராகுகாலம்;-
07-32முதல் 09-02வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
இரவு 3.44 இன் மேல் அட்டமி
சரஸ்வதி பூஜாரம்பம்

# தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை கிழக்கில் இல்லை

## அரச அதிபர்கள் தெரிவிப்பு

கொழும்பு, அக் 17
கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளரை அண்மையில் சந்தித்தனர்.

தேர்தல் நடத்தக் கூடிய நிலைமை இன்னும் கிழக்கு மாகாணத்தில் ஏற்படவில்லை என்று அவர்கள் ஆணையாளரிடம் தெரிவித்ததாகக் கொழும்பில் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பாறையை மத்திய இடமாக வைத்துக் கொண்டு மூன்று மாவட்டங்களிலும் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கிழக்கு மாகாணத்தில் 3 மாவட்டங்களில் மாகாணசபைத் தேர்தலை நடத்தக் குறைந்தது 5 ஆயிரம் ஊழியர் தேவைப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசு ஊழியர் தேர்தல் பணியில் ஈடுபடத் தயக்கம் காட்டி வருகின்றனர்.

தேர்தல் பணிக்கு ஊழியர் எப்படித் தெரிவு செய்யப்படுவர் என்பது பற்றி தேர்தல் திணைக்களத்துக்கு இன்னும் தகவல் கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் அரசு ஊழியர் தேர்தல் பணி புரிய முன்வராத பட்சத்தில் கொழும்பில் இருந்துதான் அரசு ஊழியர்களைக் கொண்டு போக நேரிடும் என்று பிரதி தேர்தல் ஆணையாளர் லஷ்மன் பெரேரா தெரிவித்தார் (உ-எ)

### கொட்டாஞ்சேனையில் குண்டு வீச்சு!

கொழும்பு அக் 17
கொட்டாஞ்சேனையில் இனந்தெரியாதஇளைஞர்கள் சிலர் நேற்றுமுன் தினம் ஒரு கோஷ்டி மீது கைக்குண்டுகளை வீசினர்கள் என்று முறையிடப்பட்டுள்ளது.

இதில் ஒருவர் பலத்த காயமடைந்தார். இருவர் சாதாரண காயங்களுக்காளானர்கள்.

அருகில் இருந்த பால் சாலைஒன்றும்சேதமடைந்தது.

கடந்தவாரம் யூ.என்.பி. அரசியல்வாதி ஒருவரை வரவேற்கவீதியை அலங்கரிப்பதில் ஈடுபட்டவர்கள் சிலரே இச்சம்பவத்தில் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### மேலும் 6 ஆயிரம் பொலீஸார் சேவையில்

கொழும்பு அக் 17
6 ஆயிரம் ரிசேர்வ் பொலீஸார் பொலீஸ் சேவையில்அடுத்தவாரம் முதல்சேர்த்துக் சொள்ளப்படவுள்ளனர்.

இதனிடையில் ரிசேர்வ் பொலீஸ் படைக்கு மேலும்8ஆயிரம்பேரைத் திரட்டும் மற்றொரு திட்டம் குறித்தும் ஆராயப்பட்டுவருகிறது. (உ-எ)

## 5 ஜவான்கள் பலி! கிழக்கில் கண்ணிவெடி!!

சென்னை, அக் 17
மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஐந்து ஜவான்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. மற்றொரு ஜவான் காயமடைந்தார்.

வெல்லாவெளிக்கும் மண்டூருக்கும் இடையில் இத்தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிகிறது

இந்திய அமைதிப் படையினர் பயணஞ்செய்த ஜீப் வண்டியே கண்ணி வெடியில் சிக்கியதாகக்கூறப்பட்டது. (உ-எ)

ஜே. வி. பி. மிரட்டல்:

## வீட்டுக்கு இருவரை போராட்டத்திற்கு அனுப்புக இல்லையேல் தண்டனையாம்

கொழும்பு, அக் 17
வீட்டுக்கு இருவரை போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்ள அனுப்பும்படி தென் இலங்கை மக்களுக்கு மக்கள் விடுதலை முன்னணி கேட்டிருக்கிறது.

இந்தக் கோரிக்கையை புறக்கணிபபவர்கள் தேசத் துரோகிகளாகக் கணிக்கப்படுவர்; அதற்காக தண்டனை வழங்கப்படும் என்றும் ஜே. வி. பி. மக்களை எச்சரித்து உள்ளது.

இக்கோரிக்கை, எச்சரிக்கை அடங்கிய துண்டுப் பிரசுரங்கள், தென் இலங்கையில் வழங்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமான சுவரொட்டிகளும் பரவலாக காணப்படுகின்றன. (உ-எ)

ஹரியானு முதல்வரின் நாடகம்:

## காலையில் ராஜினமா மாலையில் வாபஸ்!

சண்டிகார் அக் 17
தேசியஅரசியலில்தீவிர பங்கேற்கப் போவதாகக் கூறி ஹரியாணு முதலமைச்சர் பதவியை காலையில் ராஜினாமச் செய்த திரு.தேவிலால். பின்னர் தனது ராஜினமாவை மாலையில் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

ஹரியாணுச்சட்டமன்ற உறுப்பினர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே 72 வயதான திரு தேவிலால்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## எரிபொருள் வந்தது

யாழ்ப்பாணம், அக். 17
யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வந்துசேர்ந்த சரக்கு ரயிலில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்குத் தேவையான எரிபொருள்களும் எடுத்துவரப்பட்டன.

ஒருலட்சதது 25 ஆயிரம் லீற்றர் டீசலும், 71 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணையும், 26 ஆயிரம் லீற்றர் பெற்ரோலும் எடுத்துவரப்பட்டன.

தற்பொழுது யாழ். பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்திலுள்ள கையிருப்பு அடுததசனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு ரயில் வரும்வரை தாராளமாகப் போதுமானது என்று கூடடுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-9)

ஜே. வி. பி., ஸ்ரீ.ல.சு. கட்சி, தமிழ் காங்கிரஸ் உட்பட

# எட்டுக் கட்சி கூட்டணி பேச்சு அதிகாரப் பரவலாக்கல் குறித்து

கொழும்பு அக் 17
ஜே. வி. பி, ஸ்ரீ.ல.சு. கட்சி, தமிழ் காங்கிரஸ் உட்பட எட்டு எதிர் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விடயம் பரிசிலிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த எட்டுக் கட்சிக் கூட்டணியின் உத்தியோக ரீதியான பேச்சாளர் திரு. குமார் பொன்னம்பலம் (தலைவர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த எட்டுக் கட்சிக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள அரசியல் கட்சிகள் வருமாறு;

★ சுதந்திரக் கட்சி
★ மக்கள் ஐக்கிய முன்னணி
★ எக்ஸத் லங்கா ஜாதிக கட்சி
★ தமிழ் காங்கிரஸ்
★ ஜனநாயக தொழிலாளா காங்கிரஸ்
★ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
★ ஜே வி. பி

[6ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

PL-4 லேத் மெசின் விற்பனைக்கு உண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (7215)

Honda - C50, Chaly, Old Model ஆகிய மோட்டார்சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40, மணிக்கூட்டு வீதி. [ஞானம்ஸ் ஸ்ருடியோ முன்பாக) யாழ்ப்பாணம். [7038]

டீப்பிறீசர் (Deepfreezer) சிறிதுகாலம் பாவித்தது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 118, ஸ்ரான்லி வீதி. (மக்கள் வங்கி முன்பாக) (7303)

வீடு மாற்றும் நிமித்தம் 4 மாத பிறவுண் கோல்டன் கொமற் பேட்டுக் கோழிகள், 35 நாள், 25 நாள் புறொயிலர் கோழிக் குஞ்சுகள் திங்கட்கிழமை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும் 141/1, மெயின் வீதி, யாழ்ப்பாணம். (சுத்தோலிக்க அச்சகத்திற்கு முன்பாக) (7310)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broilers இறைச்சிக் கோழிகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர்; யாழ்ப்பாணம். [6989]

### கோழிக்குஞ்சு விற்பனை

பலவின பேடுகளும் 13/-, கறுப்புச் சேவல் 6/- வெள்ளை 3/- பிறவுண் 4/- R.I.R 6.50/-, புறயிலர் 16/- ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு:- சிவதாஸ், நாமகள் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. (7217)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre கோழிக்குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். (6988)

## காணவில்லை

மேரி அக்னஸ் கிளேயா அன்ட்றா ஆகிய எனது 615852880V அடையாள அட்டையையும் மணப்பையையும் 13/10/88 அன்று யாழ். நவீன சந்தையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அதனை உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7045)

## தேவை

புறெஜெக்டர் திரைப்படச் சுருள்கள் (8' × 8') வைத்திருப்போர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். தேவன் என்ரப்பிறைசஸ் இல. 15, நவீன சந்தை, சுன்னாகம். (7018)

## கல்வி

### G. C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சை

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் 6ஆம் ஆண்டு அனுமதிப் பரீட்சைக்குரிய கணிதம், தமிழ் பாடக் கைநூல் வெளிவந்துவிட்டது யாழ் மாவட்டத்தின் முன்னணிப் புத்தகசாலைகளில் கிடைக்கும். ஆக்கியோன்; ஆ. ந. இராசேந்திரன். விலை ரூ- 40/- (7302)

---

யாழ் இந்துக் கல்லூரி

## ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

★ மேற்படி பரீட்சை ஏற்கனவே அறிவித்த வண்ணம் 22-10-1988 சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கல்லூரியில் ஆரம்பமாகும்.


★ இப்பரீட்சைக்கான மாணவர் அனுமதிப் பத்திரங்களைக் கல்லூரி அலுவலகத்தில் வந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளவும். அனுமதிப் பத்திரங்கள் தபாலில் அனுப்பப்பட மாட்டாது.

ச. பொன்னம்பலம்,
அதிபர்.

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
17-10-1988. (C407)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



உயர்திரு

### நாகமுத்து கதிர்காமநாதன்

| கதிர் உதயம் | கதிர் அஸ்தமனம் |
|---|---|
| 26-04-1952 | 17 10 1987 |

சமூகப் பணியே என்பணியென
எண்ணி வாழ்ந்த பெருந்தகையே!
நீர் மறைந்து ஓராண்டாயிற்றே!!

உமது ஆத்மா சாந்தியடை பிரார்த்திக்கும் இவ்வேளையில் உமது பிரிவினால் துயருறும் தங்கள் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மல்லாகம்
கிராம அபிவிருத்திச் சங்கத்தினர்.
மல்லாகம்.

(7268)

---

†
J. M. J

## உங்கள் பயண அமைப்பாளர்




★ கனடா ★ ஜெர்மனி ★ பிரான்ஸ்
★ சுவிஸ் ★ இத்தாலி

ஷெ நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதி வாரமும்

### கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்.
அன்புடன் அழைக்கிறேன்.

● முக்கிய குறிப்பு
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்:

# S. P. ANTON

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C ...)

---

# மகளிர் குழுக்கள் மூலம் சுயதொழில் முயற்சியை பெண்கள் மேற்கொள்ள முடியும்

நெடுந்தீவு, அக். 17

ஐக்கிய நாணய சங்கங்களில் உள்ள மகளிர்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு மகளிர் குழுக்கள் வழிவகுக்கும். இதன்மூலம் பெண்கள் கூட்டுறவுத் தொழிற் பயிற்சிகளைப் பெறவும் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.

நெடுந்தீவில் மகளிருக்கான ஐக்கிய நாணய சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் உரையாற்றிய நெடுந்தீவு கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ஞா. கேதீஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஞா. ம எற்வேட் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் பேசுகையில் கூறியதாவது:-

கூட்டுறவுத்துறை வளர்ச்சி அடைய அந்த இயக்கத்தில் ஈடுபட்டுள்ள மகளிரின் உழைப்பும் ஊக்கமும் இன்றியமையாதது.

இத்துறையில் மகளிர் ஈடுபடுவதனால் கிராமிய பொருளாதார வாழ்க்கை முறைகள் உயரும்.

கிராமத்தில் அமைதியும் சமாதானமும் சிக்கனமும் நிலைக்கும்.

நெடுந்தீவில் கூட்டுறவுத் துறையில் பெண்கள் ஈடுபாடு கொண்டுள்ளது வரவேற்கத்தக்கது' இப்படி அவர் கூறினார். (ச- 111)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சு. குமாரவேல்
(பீற்றர்)
(அரியாலை)
தோற்றம்:
18- 09- 1964
மறைவு:-
17- 10- 1985

மறைந்ததோ மூன்றுண்டுகள்? உன் மரணம் இங்கே பதித்த செந்தடங்கள் களத்திலே நீ புகுந்து பதித்த வீரக் காலடிச் சுவடுகள் இங்கு இன்னும் மறையவில்லை. புன்னகைப் பொன் வதனம் புரிந்த சாதனைகள் ஏட்டில் எழுதியவையல்ல மனதில் பதித்தவையே இனமிங்கே வாடுகையில் மனம் விரும்பிப் போராடப் புறப்பட்ட வேங்கையின் மைந்தனே உன் நினைவு என்றும் மாறாது.

உன்பிரிவால்வாடும்;
பெற்றோர்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.
(7309)

---

### ஹாட்லி பழைய மாணவர் நிதியுதவி

பருத்தித்துறை, அக் 17

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 வருட பூர்த்தியை முன்னிட்டு லண்டனிலுள்ள ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர்கள் மதிய போசன விருந்தொன்றை சிறப்பாக நடாத்தினார்கள் அச்சமயம்ஹாட்லிக்கல்லூரி நம்பிக்கை நிதியம் ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்நிதிக்கு லண்டன் விம்பிஸ்டனில் வசிக்கும் ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர்கள் ஆயிரத்து ஐந்நூறு பவுண்களை அன்பளிப்புச் செய்தனர். இப்பணத்திற்கான வங்கிக்கட்டளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-118)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. பொன். செல்வராசா
(ஆசிரியர்)

ஆண்டவன் படைப்பு: 30 - 03 - 1950
அநியாய அழிப்பு: 03 - 09 - 1988

அன்பும் பாசமும் நிறைந்த நாயகனாய் தந்தையாய் மகனாய் சகோதரனாய் வாழ்ந்த எம் குலதெய்வமே! பொது நலம் பேணி வாழ்ந்த உமது ஆருயிரை அநியாயமாக அழித்துஎம்மைப் பரிதவிக்க விட்டனரே படுபாவிகள், எமது இதயக் குமுறலையும் நாம் சிந்தும் கண்ணீரையும் நீக்க யாருளர், நாம் உம்மை நினைந்து இறைவனை வேண்டி சிந்தும் கண்ணீர் உமது ஆத்மாவுக்குச் சாந்தியளிப்பதாக.

ஆறாத்துயரில் வாடும்
மனைவி, மக்கள்,
தந்தை, சகோதரர்,
உற்றார், உறவினர்கள்.

"..."
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.

(7311)

---

## கல்லூரி அபிவிருத்திக்கு 30 ஆயிரம்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் முயற்சிகளைத் தொடர்ந்து கல்லூரியின் அபிவிருத்திக்கு முப்பதாயிரம் ரூபா நிதி கிடைத்துள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகளின் பெற்றோர்கள் கல்லூரியின் அபிவிருத்தி கருதி மனமுவந்து இந்நிதியை பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். (இ118)

---

## தேவை

### வான் செலுத்தச் சாரதி தேவை

கொழும்பில் உள்ள ஒரு ஸ்தாபனத்தில் கடமை புரிய வேண்டும்.
(குடும்பப் பொறுப்பில்லாதவர் விண்ணப்பிக்கவும்.)

வயது: 35க்கு மேல்.

இவர் வேறும் பல பணிகள் புரியக்கூடிய ஆற்றல் உள்ளவராகவும் இருக்க வேண்டும்.

செயலாளர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா
சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(C 610)

---

## ஓராண்டு நினைவு அஞ்சலி



### திரு. ந. இரத்தினசபாபதி
(இளைப்பாறிய ஆசிரியர்)

| தோற்றம்: | ஆண்டவன் அழைப்பில்: |
|---|---|
| 5 - 9 - 1928 | 29 - 10 - 1987 |

திதி நாள்: 17. 10. 1938

எங்கள் அன்புத் தெய்வமே! அருமைக் கணவனாகவும், ஆருயிர் அப்பாவாகவும், அன்புக்கு அர்த்தம் சொன்ன அருள் ஆசானாகவும், நித்தம் முருகனை அடிமனத்திலிருத்தி அல்லும் பகலும்அவனருளாலே அவன் தாள் வணங்கி, அறம்பல ஆற்றி அஞ்செழுத்தும். நெஞ்சில் அழுத்தியஆரணங்கு: அறிவுத்தெளிவாலும். ஆற்றலினாலும், கிள்ளும் தொனியாலும் ஆயும் புலமையினாலும், ஆசிரிய சேவையிலே அழியாத மாண்பினை ஆழமாகப் பதித்த அன்பு பொங்கும் ஆசிரிய!

அவன் அடிதொழுது அனைவரையும் அழவைத்து ஆளான அடியவர்களின் துயர்களை அறுத்து ஆண்டருளும் கலியுக வரதக் கடம்பக்கந்தனினதும் பத்திரகாளி அம்பிகையினதும் திருவடிகளை அடைந்த அன்புத்தீபத்தை, அறிவுச் சுடரை நாள் தோறும் நினைவு நாளாகக் கொண்டு கண்ணீர்ப்பூக்களால் மாலை அணிகின்றோம்.

ஆண்டு ஒன்றல்ல ஆயிரம்தான்
சென்றாலும்
ஈண்டு உம் நினைவு எம்மைவிட்டு
அகலாது
மீண்டு நீங்கள் வரும் நாள்
மகிழ்வுடனே பார்த்திடுவோம் வர
வேண்டும் நீங்கள் இங்கே
விண்ணரசே விரைந்திடுவீர்

அன்பு தவழ் அருமை மனைவி
பரிமளகாந்தி,
அருமை மகன்
சிவசண்முகநாதன்,
அருமை மருமகள்
லலிதாம்பிகை,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

141/2, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (7312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்புற்ற மீனவர்களுக்கு உடன் நிவாரணம் வழங்குக

## முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

அம்பாறை அக் 17

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

கடந்த ஐந்து வருட காலமாக மீனவர்கள் வடக்கிலும், கிழக்கிலும் தங்களின் தொழிலை முறையாக நடத்தமுடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் இன்று பல்லாயிரக்கணக்கானோர் உண்ண உணவின்றி, வசிக்க வீடின்றி தொழிலற்று அல்லலுறுகின்றனர். எனவே இவர்களின் பரிதாப நிலையை உணர்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

யுத்த நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட சிங்கள மீனவர்களுக்கு கொடுக்கப்பட்ட மானியம், மற்றும்நிதி உதவிகள் கடன் வசதிகள் பாதுகாப்பு வசதிகள், தொழில்உபகரண உதவிகள் போன்ற சலுகைகள் தமிழ், முஸ்லிம் மீனவர்களுக்கும் வழங்க ஆவன செய்ய வேண்டுமெனவும் முஸ்லிம் காங்கிரஸ் அரசைக் கோரியுள்ளது.

அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் மீனவர்கள் தம் தொழில் செய்ய முடியாதபடி விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவுகளையும் உடனடியாக நீக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

(உ-14)


### இலங்கைச் சுங்க அலுவலகம்
மன்னார் மாவட்டம்

1988 அக்டோபர் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த

### விற்பனை இரத்துப்பற்றிய அறிவித்தல்

1988 செப்டெம்பர் 30ஆம் திகதிய தினசரிகளில் வெளியாகிய பல்வகைப் பொருட்கள் விற்பனை பற்றிய அறிவித்தல், தற்போதைய நாட்டின் சூழ்நிலை காரணமாக இரத்துச் செய்யப்படுகின்றது.

இதனால பொதுமக்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகின்றேன்.

ஏ. சி. செபநாயகம்,
மன்னார் மாவட்ட மேலதிக சுங்கச் சேகரிப்பாளர்.
(C/604)



### தேவை

அனுபவமுள்ள காசாளர் தேவை. (இருபாலாரும்). மாநகர எல்லைக்குள் வசிப்பவர்மட்டும 22-10-88 க்கு முன் விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

கொழும்பு ஸ்ருடியோ:
55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)
(C/600)


# முதியோர் வாரத்தை முன்னிட்டு பல வேலைகள்

குருநகர், அக் 17

அக்டோபர் 10ஆம்திகதியில் இருந்து நேற்று16 ஆம் திகதிவரை கைதடி, அரசினர் முதியவர் இல்லத்தில் முதியோர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து பல அபிவிருத்தி வேலைகள் இல்லத்தில் நடைபெற்று வருகின்றன

தினமும் யாழ் அரசினர் வைத்தியசாலையில் இருந்து டாக்டர்கள் திருமதி கணேசமூர்த்தி ஆர். தெய்வேந்திரன் தலைமையில் செல்லும் பத்துப் பேர் கொண்ட வைத்தியக் குழு வயோதிபர் இல்லத்தில் வயோதிபர்களது. உடல் நிலையைப் பரிசீலனை செய்து ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

யாழ்- செஞ்சிலுவைச் சங்கக் கிளை வயோதிபர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை வழங்க முன் வந்துள்ளது.

லியோ, ரோட்றிக் கழகங்கள் வயோதிபர்களுக்கான ஆடைகளை வழங்கி வருகின்றன.

(இ-51)

# வன்னேரிக்குளம் பகுதியில் இருந்து வெளியேறியோர் அவதி

வட்டக்கச்சி, அக் 17

வன்னேரிக்குளர் பகுதியிலுள்ள ஆனைவிழுந்தான் என்னுமிடத்தில் இருந்து அகதிகளாக வெளியேறிய மக்கள் தற்போது கிளிநொச்சி புக்த விகாரையில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் போதிய உதவி இன்றி கஷ்டப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் பின்வருமாறு எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்

எங்களுக்கு சில பொது ஸ்தாபனங்கள் நிவாரண உதவிகளை சிறிதளவு வழங்கின. ஆனால் எங்களுக்கு இந்த உதவிகள் போதாது.

தற்போது எங்கள் குழந்தைகளுக்கு வயிற்ரோட்டம் தொடர்காய்ச்சல் பரவியுள்ளன.

மருந்து வகைகள் மற்றும் குழந்தைப்பால் மா உணவுபபொருள் களும் போதாமையால் மிகவும் கஷ்டப்படுகின்றோம்.

இருப்பிடத்தை விட்டு அகதிகளாக வந்த எங்களுக்கு போதிய அளவு நிவாரணம் வழங்க பொது ஸ்தாபனங்கள் வராதது வருந்தத்தக்கது.

இப்படி அவர்கள் தெரிவித்தனர். (இ-ரி)

# கலாசாரத்தைப் பேணும் நாடகங்கள் அவசியம்

## கருத்தரங்கில் வலியுறுத்து

குருநகர், அக் 17

"ஈழத்தமிழர்களின் கலாசாரம் விளங்கும் வகையில் நாடக முயற்சிகள் வளர்க்கப்பட்டு அதற்கான அரங்கியலும் பேணப்பட வேண்டும் ஈழத்துத் தமிழ் நாடக எழுத்தாளர்கள், கலைஞர்களின் கைகளிலேயே இது தங்கியுள்ளது"

யாழ்- திருமறைக் கலாமன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட "நாடகம், அரங்கம் சார்ந்த விடயங்கள்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் குழந்தை எம் சண்முகலிங்கம் கருத்துரை வழங்குகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கருத்தரங்கு திருமறைக் கலாமன்றத் தலைவர் அருட்திரு. ஆர். எம். ஜி நேசநாயகம் தலைமையில் நடைபெற்றது.

வண. பிதா, பி எம். இம்மானுவேல் அடிகள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

பொதுச் செயலாளர் திரு. வி. எஸ். ஞானஸ்ஸௌந்தரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

குழந்தை எம். சண்முகலிங்கம் தொடர்ந்து பேசுகையில்,

'நாடகம் பற்றிய அறிவு வளர்வதற்கு ஈழத்தில் போதிய நூல்கள் கிடைப்பதில்லை. அவற்றை வெளிநாடுகளில் இருந்து வரவழைத்துள்ளோருக்கும் பயன்படும் வகையில் நூல் நிலையங்களில் களஞ்சியப்படுத்தி வரவேண்டும்.

ஈழத்தமிழர் கத்தோலிக்க வரலாற்றில் திருமறைக் கலாமன்றம் புதிய உத்தியில பல நாடகங்களை அரங்கேற்றி நம்பிக்கைக்கு உரியதாக வளர்ந்து வந்தது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பின்னடைவை நிவர்த்தி செய்து மேலும் பலபுதிய நாடகங்களை அரங்கிற்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என்றார்.

கருத்தரங்கு முடிவில் கலாமன்றச் செயலாளர் திரு. கி. பா. நெல்சன் நன்றியுரை நிகழ்த்தினார். (உ 51)

### கருத்தரங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் முறைசாரா கல்விப் பிரிவினை நடத்தும் பாடசாலை அதிபர்கள், போதனாசிரியர்களுக்கான கருத்தரங்கு இம்மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் பத்திய கலலூரியில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு வெற்றிவேலு சபாநாயகம் தலைமையில நடைபெறும் இக்கருத்தரங்கில் புதிய பல அறிவித்தல்கள் வழங்கப்படவுள்ளதால் அதிபர்கள் இக்கருத்தரங்கில கட்டாயம் சமூகமளிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர்.

முறைசாரா கல்வி தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் புதிய அறிவுறுத்தல்கள் பற்றிய விளக்கம் கொடுப்பார்.

யாழ். கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கே. சந்தசாமி, வேலை அமர்வு முகாமைத்துவ கடமைகள் பற்றியும், கணக்காளர் திரு ஆர். சுகுணதீசன் கொள்ளனவும் [illegible] பற்றியும் கருத்துரை வழங்குவார்கள். [illegible]

### லோக்வூட் உதவி

நெடுந்தீவு அக் 17

லேடி லொக்வூட் தர்ம ஸ்தாபனத்தின் மூலம் வழங்கப்படும் நிவாரண உதவிகளை நெடுந்தீவில உள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு நா. கணபதிப்பிள்ளை பிரஜைகள் குழுச் செயலாளர் புலவர் திரு. அ. வெ. அரியநாயகம் ஆகியோர் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களால் இவர்களிடம் வழங்கப்பட்ட விவரக் கோவைகளை மேற்படி நிறுவனத்திடம் சமர்ப்பித்து நிவாரண உதவிகள் வழங்குமாறு இவர்கள் கோரியுள்ளனர்

நூற்றுக்கும் அதிகமான மக்கள் உதவி கோரி விண்ணப்பித்துக் கொண்டனர்.

பலர் தமது குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுள்ளனர். (இ-111)

## ஆரம்ப ஆசிரியர்களுக்கான

# நியமனக் கடிதங்கள் இன்று முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், அக். 17

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 705 ஆரம்ப ஆசிரியர்களிற்கும் நியமனக் கடிதங்களையும், அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள பாடசாலை பற்றிய விபரங்களையும் வழங்கும் வேலைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

ஆரம்ப ஆசிரியர்களிற்கான சேவைக்கால முன்பயிற்சியின் போது முதலாவது குழுவில் பயிற்சிபெற்ற 705 பேருக்கு மட்டுமே தற்பொழுது நியமனங்கள் வழங்கப்பட உள்ளது. இவர்கள் அனைவரும் 25ஆம் திகதிக்கு முன் தமது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பின்வரும் தொகுதிகள் வாரியாக வழங்கப்படும்:

இன்று 17ஆம் திகதி (திங்கட்கிழமை) காலை:- ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்தவர்கள்.

18ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) காலை:- சாவகச்சேரி, பருத்தித்துறை.

மாலையில்:- நல்லூர் தொகுதி.

19ஆம் திகதி (புதன் கிழமை) காலை: உடுப்பிட்டி, காங்கேசன் துறை.

20 ஆம் திகதி (வியாழக்கிழமை) காலை; கோப்பாய், மானிப்பாய்.

மாலையில்:- யாழ்ப்பாணம்

மேற்குறிப்பிட்ட தொகுதிகள் வாரியாக யாழ் கல்வித் திணைக்களத்தற்கு சமுகம் தந்து பிரதம கல்வி அதிகாரி கு. சோமசுந்தரத்திடம் இருந்து நியமனக் கடிதங்களையும், பாடசாலை விவரங்களையும் பெற்றுக் கொள்ளும்படி ஆரம்ப கல்வி ஆசிரியர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

(உ-9)

### நாமகள் விழா

யாழ்ப்பாணம் அக் 17

ஊரெழு மதி அக்கடமி, மகவம் ஆகியவற்றின் நாமகள் விழா எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும். இவ்விழாவில் மதி அக்கடமி மாணவரின் கலை நிகழ்ச்சிகளும் ஆசிரியர் திரு. க. ஆனந்தராசாவின 'சக்தி வழிபாடு' பற்றிய கருத்துரையும் இடம் பெறும்.

(உ)

# ஒரு மணி நேரத்தில் பட்ஜெட் தயாரித்து சமர்ப்பிப்பேன்

## பிரேமா கூறுகிறார்

கொழும்பு, அக் 17

வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க எனக்கு ஒரு மணி நேரம் போதும். நிதி அமைச்சர்கள் தண்ணீர் அருந்திக்கொண்டும், தேநீர் அருந்திக்கொண்டும் நாட்கணக்காக சிரமப்பட்டே வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கிறார்கள். ஆனால் எனக்கு வரவு செலவுத் திட்டம் தயாரிக்க ஒரு மணி நேரம் மட்டுமே போதுமானது.

இவ்வாறு பிரதமர் பிரேமதாசா டெடிகம, மற்றும் கம்பளையில் நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

நிதி அமைச்சர்கள் வரவு செலவுத திட்டத்தைத் தயாரிப்பது கஷ்டம் என்கின்றனர். நான் வெளி நாட்டிற்குச் சென்று இவ்வளவு கொண்டு வந்தேன் என்கின்றனர்.

வீடமைப்புக் கடனுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்தோம் என்கின்றனர். ஆனால் பின்னர் பார்த்தால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை.

நான் வேறு வழியில் கடனைப் பெற்றே வீடமைப்புத் திட்டத்தை மேற்கொள்கிறேன்.

பாடசாலைகளில் மதியம் பணிஸும், பாலும் வழங்கும திட்டம் பூரண வெற்றி பெற்றுள்ளது. எனவே நாட்டின் சகல பகுதி பாடசாலைகளிலும் இந்தத் திட்டத்தை அமுல் படுத்த எண்ணியுள்ளேன்.

நான் ஜனாதிபதியாக வந்தால், புதிய வரவு செலவுத் திட்டத்தைத் திறைசேரி தயாரிக்காது நானே தயாரிப்பேன்.

இதுவரை காலமும் திறைசேரி அதிகாரிகளே வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து வந்தனர்.

அதை நிதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து வந்தார்.

இனி அது இருக்காது. இதற்கு திறைசேரி அதிகாரிகள் உடன்படாவிட்டால் அவர்கள் வேறு தொழிலைப்பார்க்க வேண்டியதுதான்.

நான் பதவிக்கு வந்த இரண்டு ஆண்டுகளில் பசி, பட்டினி வறுமையை ஒழிப்பேன் முடியாவிடின மறுவருடம் முன்னர் நான் ஜனாதிபதி பதவியை ராஜினாமாச் செய்து விட்டுப் போய்விடுவேன்.

நான் சாதாரணமானவன்; சாமான்யமானவன்.

வானத்தில் இருந்தோ அல்லது 'வளவில்' இருந்தோ வரவில்லை.

எமக்கு நண்பன் இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் நண்பர்கள் நாம் உலகில் தனித்து விடப்படவில்லை என்பதை.

தேவை ஏற்படும் போது எமக்கு உதவ சீனா ஜப்பான் போன்ற நாடுகளும் தயாராக உள்ளன.

இப்படி பிரதமர் சொன்னார். (உ-எ)

### யாழ் லயன்ஸ் இலவசபற்சிகிச்சை

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பற்சிகிச்சைகளை யாழ் லயன்ஸ் கழகம் அளித்து வருகிறது.

யாழ் பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் திரு.எஸ். நித்தியானந்தன் இந்த இலவச சேவையை அளித்து வருகிறார்.

பதின்மூன்று வயதுக்குட்பட்ட மாணவர்கள் இவ்வாறு இலவச பற்சிகிச்சையைப் பெறமுடியும் என யாழ் லயன்ஸ் கழகத்தலைவர் திரு.எஸ். விக்கினராசா தெரிவித்துள்ளார். (இ-90)

### வை.எம்.சி.ஏ அன்பளிப்பு

நவாலி வை.எம்.சி.ஏ இயக்கத்தினர் இப்பகுதியில் உள்ள உயர்வகுப்பு வறிய மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள், சீருடைகள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்

(இ-90)


### Computer Programming in Basic

Duration - 2½ Months
Week day Batch (Tue & Wed 11-30a m.)
Commencing on: 18-10-88
1st Instalment : Rs 400/- Only
Practicals on IBM & other Computers
Valuable Certificate will be awarded

IDP
Institute of Data Processing
K. K. S Road (சிவன்கோவிலடி)
யாழ்ப்பாணம்
● தெல்லிப்பளை கிளையில்
17-10-88 (3-30 மணிக்கு) ஆரம்பமாகும்
(7196)



ஓம்

### திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான விபவ வருடம் ஐப்பசி மாதம் 7 ஆம் நாள் (23-10-88) ஞாயிற்றுக்கிழமை பகல் 10 53 மணிமுதல 11. 53 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

எமது சகோதரர் திருநிறைச் செல்வன் உருத்திரகுமார் அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறைச் செல்வி மஞ்சுளா அவர்களுக்கும்

பம்பலப்பிட்டி அருள்மிகு பழைய ஸ்ரீ கதிரேசன் கோவிலில் திருமணம் நிகழ்த்த திருவருள் கூடியிருப்பதால், அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

நா. சுந்தரலிங்கம்
தம்பதிகள்
503, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

அ. ஸ்ரீநிவாசன்
தம்பதிகள்
444/2, ஹவ்லக் வீதி,
கொழும்பு - 5

(இரு வீட்டார் அழைப்பு) (7306)



### நீர்விநியோகம் உங்களுக்கு ஒரு பிரச்சினையா? இன்றே தீர்வு காண சிங்கர்

### பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம்

கிணற்றில் அல்லது உயர நீர்த்தாங்கியில் இருந்து நீரைப் பெறும் நீங்கள் அமுக்கப் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் சிங்கரின் பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நாடித் தீர்வு காணுங்கள்.

சிங்கரிடம் பலவகையான பிறஷ் இல்லா மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்ளன. விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

- அதிகபட்ச உறிஞ்சு திறன் 1400 கலன்/மணி முதல் 4500கலன்/மணி
- அதிகபட்ச உறிஞ்சு ஆழம் 25 அடி. (கிணறு மேலும் ஆழமெனின் ஆழ் கிணறு உபகரணங்கள் ரூ. 900/-க்கு உண்டு.)
- மொத்த வீச்சு அளவு 65 அடி.

மொடல் ஈ.பி.எம். 10 1"×1" ரூ. 4,090/-
ஈ.பி. 15 1½"×1½" ரூ. 4,290/-
ஈ.பி. 20 2"×2" ரூ. 5,930/-




விவசாயப் பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. நிலையானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுக்கு நிவாரண உதவி இல்லையா?

## நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் பிரசைகள் குழு கவலை

நெடுந்தீவு, அக். 17

பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பல்வேறு நிறுவனங்களாலும் வழங்கப்படும் நிவாரண உதவிகளைப் பெறமுடியாத நிலையில் அவதிப்படுகின்றனர் நெடுந்தீவுமக்கள்.

மரணமடைந்த மற்றும் காணமல்போன உடல் ஊனமுற்றவர்களுக்கு பல்வேறு பகுதிகளிலும் நிவாரண உதவிகள் கிடைக்கின்றன.

இதுபோன்ற உதவிகள இன்னமும் நெடுந்தீவு மக்களுக்குக்கிடைக்கவில்லை என நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் நெடுந்தீவு பிரஜைகள் குழு ஆகியன வருத்தம் தெரிவித்துள்ளன.

குடும்பத் தலைவனை அன்றி அக் குடும்பத்தைக் காப்பாற்றும் ஒருவரோ இறந்து விட்ட போதும் அவர்கள் இறந்ததற்கான அத்தாட்சிகளைச் சமர்ப்பிக்க முடியாத நிலையில் உள்ள மக்கள் தமது குடும்பத்தில் உள்ள இறந்தவர்கள் பற்றி இங்குள்ள அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யச் சென்றால் அதிகாரிகள் போதிய அத்தாட்சி இன்றித்தாம் இவற்றைப் பதிவுசெய்ய முடியாதெனத் தெரிவிக்கின்றனர்.

சூட்டுக்கு இலக்சாகியும் இதர வன்முறைகளினாலும் இங்கு கணிசமான எண்ணிக்கையினர் இறந்துள்ள போதும் அந்த இறப்புக்கள் குறித்து பதிவு செய்ய முடியாத நிலையில் நெடுந்தீவு மக்கள் இவற்றுக்கான நிவாரண உதவிகளைப் பெறமுடியாது தவிக்கின்றனர்.

தமது குடும்பத்தில் உள்ள இறந்தவர்கள் குறித்தும் நிவாரண உதவிகள் கோரியும் அனேகர் விண்ணப்பித்துக் கொண்ட போதும் குடாநாட்டின் இதர பகுதிகளில் உள்ளவர்களுக்குக் கிடைத்தது போன்று இங்கு எவருக்குமே நிவாரண உதவிகள் கிட்டவில்லை என்று கூறப்படுகிறது.

அனேக மீனவர்கள் உட்பட பலர் கடந்த வன் செயல்களின்போது இறந்தும் காணமல் போயும் உள்ளனா என்பது குறிப்பிடத்தக்கது. (இ-111)

### மூடப்பட்டன

கொடிகாமம் அக் 17

யாழ்ப்பாணத்தில் இந்திய படையுடனான நேரடி மோதலில் ஈடுபட்டுவீரமரணமடைந்த வரணியூரைச் சேர்ந்த பொல கௌரிபாலாவுக்கு (சரிபாலன்) அஞ்சலி செலுத்துமுகமாக கடந்த சனிக்கிழமை நண்பகல் 12 மணிமுதல் தென்மராட்சிப் பகுதி வர்த்தக ஸ்தாபனங்கள் அனைத்தும் மூடப்பட்டன. (உ-15)

# பேச்சுவார்த்தை மூலம் நிலையான தீர்வு அவசியம்

தலைமன்னார் அக் 17

எல்லா விடுதலை இயக்கங்களும் கட்சிகளும் பேச்சுவார்த்தை மூலம் நிலையான தீர்வை ஏற்படுத்தி எமது பகுதியில் அமைதியை ஏற்படுத்த செபதபங்கள் அவசியம்.

மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு. அ. சேவியர் குருஸ்மன்னார் மறை மாவட்ட மக்களுக்குவிடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கோரி உள்ளார்.

மன்னார் குரு முதல்வர் அருட்திரு. சேவியர் குருஸ் மன்னார் ஆயர், குருக்கள் சார்பாக மேலும் கோரி இருப்பதாவது:-

தற்பொழுது நடைபெறுகின்ற அவசியமற்ற கைது செய்தல, தடுத்து வைத்தல், வீண்தொல்லைகள், அச்சுறுத்தல்கள் போன்றவை மன்னார் மக்களையும் ஆட்கொண்டிருக்கின்றன.

இதே வேளையில் மன்னார் மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் சேவைகள் வழங்குவதில் பெரும் சிரமங்கள் உருவாகின்றன.

சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட நீடித்த சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வது நலமாகும்.

இதற்கு ஒவ்வொரு இறைமக்களினதும் செபதபங்கள் அவசியம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### தளபாடம் அன்பளிப்பு

கொடிகாமம் அக் 17

கச்சாய் மகாவித்தியாலயம் சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி ஆகியவற்றுக்கு "ஒற்பாஞ" நிறுவனம் மேசை கதிரைகளை அன்பளிப்புச்செய்துஉள்ளது. (உ-75)

### இடமாற்றம்

காங்கேசன்துறை மக்கள் வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராகப்பணிபுரிந்த திரு. அரசநிலை இம்மாதம் முதல் மாங்குளம் மக்கள் வங்கிக் கிளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ - 94)

# மட்டக்களப்பில் 624 பேர் ஆசிரியர் நியமனம் பெற்றனர்

மட்டக்களப்பு, அக். 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள 624பேர் பாடசாலைகளில் தமது கடமைகளை இம் மாதம் 1ஆம் திகதிமுதல் ஏற்றுள்ளனர்.

மேற்படி ஆசிரியர்களுக்கு அவர்கள் விண்ணப்பித்த கிராமசேவை அலுவலகர் பிரிவுகளிலேயே நியமனம் வழங்கப்பட்டாது.

ஒரு பிரிவில் வெற்றிடத்திற்கு மேலதிகமான புதிய ஆசிரியர்களின் எண்ணிக்கை இருந்தால் மேலதிகமாக நியமனம் பெறுவோர் அருகிலுள்ள கிராம சேவை அலுவலகர் பிரிவிற்கு இடம் மாற்றம் செய்யபடுவர்.

சேவைக்கால முன்பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட திகதி (22 9-88) முதல் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-21)

# லண்டன் கோயிலுக்கு குருக்கள்

பருத்தித்துறை, அக். 17

லண்டன் விம்பில்டன் கணபதி கோயிலுக்குப் புதிய குருக்கள் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து பயணமானார்.

லண்டன் விம்பில்டன் கணபதி கோவிலின் தர்மகர்த்தா திரு.வி.ரி எஸ் இரத்தின சிங்கத்தின் வேண்டுகோளுககிணங்க பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா அண்மையில் நடாத்திய நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின்படி யாழ்.சட்டநாதர் கோவிலின் அர்ச்சகர்களில் ஒருவராகக் கடமையாற்றிய திரு. பா. பாலசுந்தரக் குருக்கள் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் இம்மாதம் 10ம் திகதி லண்டன் பயணமானார். (இ-118)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நல்லம்மா இரத்தினம்**

மண்ணுலகு: 18. 06. 1919 — விண்ணுலகு: 29- 10. 1987


திதி: 17- 10. 1988

அன்பினல் எமையெல்லாம்
ஆட்கொண்ட அன்னையே, தாயே- உயர்
பண்புகளனைத்தையுமே உனதாக்கி
வாழ்ந்தெமக்கு வழிகாட்டி இன்று நீ எம்
கண்களெல்லாம் நீராக
காலமெல்லாம் நாம் வாட
விண்ணுலகம் சென்றனையோ• உன்பிரிவு இம்
மண்ணுலகில் வாழு மட்டும்- உன்
மக்களெம்மை வாட்டுமம்மா- நீ
மறுபிறவி எடுத்து வந்து
எம் மனக் கலக்கம் தீர்ப்பாயோ?

உன் பிரிவால் வாடும்:
கணவன், மகன்மார், மருகியர்,
சகோதரி, பேரப்பிள்ளைகள்.

"இந்திரவாசம்"
தாவடி தெற்கு,
கொக்குவில். (7039)

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன்**

தோற்றம்: 21 - 10 - 1924 — மறைவு: 15 - 9 - 1988

பாசமாய் எமை வளர்த்த
நேசமுள்ள தந்தையாரே
ஈசனடி சேர்ந்தீரோ
எமை விட்டு
ஆசையாய் நாம் எல்லோரும்
ஐயா என்றழைத்து
நேசமாய் இருந்தோமே
எமைப் பரிதவிக்க விட்டீரே,

உமது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

எமது இல்லம் நாடி வந்து பிரிவுத் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளை, உறவினர், நண்பர்கள,

பத்தானைக் கேணியடி,
தொல்புரம். (7029)

# முதியோர் இல்லத்துக்கு வாகன வசதி அவசியம்

## முதியோர் வார வைபவத்தில் உரை

குருநகர். அக் 17

முதியவர்கள் திடீர் திடீரென்று விழுந்து கால், கைகளை உடைத்துக்கொள்வதுசகஜமான விடயம் அத்தகைய நேரங்களில் அவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கான வாகன வசதி இன்மையால் பல மணி நேரம் கழித்தே அவர்களைக் கொண்டு செல்ல முடிகிறது.

முதியவர் வாரத்தை ஒட்டிகைதடி முதியோர் இல்லத்தில்நேற்றுச்சனிக்கிழமை நடைபெற்றகலை நிகழ்ச்சி வைபவததில் நன்றி தெரிவித்துடபேசிய இல்ல வைத்திய நிபுணர் திரு எஸ் குணரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்ச்சிகளுக்கு முதியவர் இல்லப் பொறுப்பதிகாரி திரு.த.பாலதேவன் தலைமை வகித்தார்.

டாக்டர் எஸ் குணரத்தினம் மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு பன்னிரெண்டு ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவத்தில் மனிதனது தனிமை நிலையைத்தான் எனது மனம் பல தடவைகள் சிந்தித்து நெகருகி இருக்கிறது.

வெளிநாடுகளில் இருந்து பிள்ளைகள்பணத்தை அனுப்பிக் கொண்டிருக்கலாம் வயதான பெற்றோர்கள் இறுதிக் காலத்தில் ஜீவன்போகின்றநிலையில் எத்தனை சஞ்சலப் படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

சமீபத்தில்இந்தவயோதிபர் இலலத்தில் காலமான ஒருவர் என்னைப் பார்தது "பக்கததில் வாருங்கோ எனக்கு மகன் இல்லை. எனக்கு மகனாக இருங்கோ" என்றார்.

அந்தநேரத்தில், அவரது ஜீவன அமைதியாக அடங்க பக்கத்தில் நின்று சகலதையும் செய்தோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அறவழிப்போராட்டக் குழுவைச் சேர்ந்த திரு. தங்கராசா, 'செல்பேச்' சார்பில் டாக்டர் எஸ். தேவசகாயம் ரோட்டறிக்கழகம் சார்பில் திரு. சிவராசா, டாக்டர் சுந்தரலிங்கம் ஆகியோரும், லியோக் கழக சார்பில் பி.ரகுநாதன், மில்க்வைற் அதிபர் திரு.க கனகராசா ஆகியோரும்உரை நிகழ்த்தினர்.

வைபவம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக வயோதிபர் இல்ல வளவில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் குருக்கள் பிரம்மஸ்ரீ எஸ் செல்லத்துரை அவர்களால் விஷட பூசை நடத்தப்பட்டது.

கிறிஸ்தவ ஆலயத்திலும் வழிபாடு நடைபெற்றது.

ரோட்டறி, லியோ கழகங்களால் வயோதிபர்களுக்கு உடுபுடைகள் வழங்கப்பட்டன.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா ஒவ்வொருவருக்கும் சவர்க்காரம் வழங்கியதுடன், இல்லத்துக்கு வாழை, சவுக்கு, அகத்தி, பப்பாசி மரங்களும், தண்ணீர்த் தொட்டி, அழுக்குகள் போடும் தகரம் என்பவற்றையும் அன்பளிப்புச் செய்தார்.

இறுதியாக லியோ கழகம் வயோதிபர்களை மகிழ்விக்க பல கலை நிகழ்ச்சிகளை வழங்கியது. (இ-51)

## முதலாம ஆண்டு நினைவஞ்சலி



**திரு. வல்லிபுரம் சபாபதி**

மலர்வு: 14. 04. 1922 — உதிர்வு: 17. 10. 1987

வீட்டினிலே தலைவனாக,செயல் வீரனாக, உறுதியான இலட்சிய வீரனாக எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் அன்பாய், பண்பாய் பாசமாய் எம்முடன் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த தெய்வமே! ஒரு யுகம் முடிந்தாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (7262)

# முஸ்லிம் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு உதவ

## புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

அம்பாறை, அக். 17

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் உயர் கல்விக்கான புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறது.

பல்கலைக்கழக அனுமதி பெறும் முஸ்லிம் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு அவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கென மாதாந்தம் புலமைப்பரிசில் வழங்குவிக்கும் நோக்குடன் இந்த நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

ஆசிரியர்கள் மாதாந்தம் சம்பளம்பெற்று வருவதன்காரணமாக அவர்களது பிள்ளைகளுக்குமகாபொல போன்ற புலமைப் பரிசில்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

ஆனல் வேறு வருமானம் எதுவும் அறியும். அதிக குடும்ப பாரத்தையும் கொண்ட பல ஆசிரியர்கள் தமது பிள்ளைகளைப் பல்கலைக்கழகக் கல்விக்கு அனுப்பவசதியின்றிப் பல அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

இத்தகைய அவலநிலையிலுள்ள முஸ்லிம் ஆசிரியர்களின் பிள்ளைகள உயர்கல்வியைத் தொடர்வதற்கு ஆதரவளிக்கும் நோக்குடனேயே இந்த புலமைப்பரிசில் நிதியத்தை ஆரம்பிக்க இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் முன்வந்துள்ளதாக சங்கத் தலைவர் இஜப் எம். வை ஏ. பாவா உதயனுக்குத் தெரிவித்தார், (இ-14)

## ஓராண்டு நினைவஞ்சலி



மாவிட்டபுரம்
செல்வன்:
**வல்லிபுரம் கணேஸ்வரன்**
(கோணேஸ், தென்றல்)

மலர்வு: 1966- 04- 28 — உதிர்வு: 1987- 10- 17

ஓர் ஆண்டு சென்றதையா எங்கள் உள்ளம் துடிக்குதய்யா, எம் இனத்தின் விடிவுக்காக நீர் உடம்பை அர்ப்பணித்த தியாகத்திற்கு விடிவு உண்டு. மீண்டும் வருவாய் என்று கூறிச்சென்ருய், ஆனல் நீ வர மறுத்துவிட்டாய்,உன் கடமையிலகண்ணியமாய் நடந்த கடமை வீரனே! உன் சொல்லை நிறைவேற்றிவிட்ட அரிச்சந்திரனே.

உன் ஆத்மா சாந்தியடைய மாவை விஞயகர், அம்பாளை பிரார்த்திக்கின்ரேம்.

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தினரும்,
மாணவர் மன்றததினரும்.

(7261)

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



ஆண்டவன் படைப்பு:

| | |
|---|---|
| இ. சகாதேவன் | 13. 04. 1943 |
| சி. மீனலோஜினி | 23. 08. 1955 |
| ச. தயாளன் | 18 06. 1980 |
| ச ஹரன் | 23. 09. 1981 |
| ச, வனஜா | 13, 12. 1983 |

அநியாய அழிப்பு: 17.10.1987

மாருத அன்பினல் மகிழ வைத்த
எம் செய்வமே
மாறுமோ உனது பிரிவுத்துயர்
மாருது மாருது எம் உயிர் இருக்கும் வரை
ஆசைக்கொரு சகோதரனுய்
பாசம் மிகு மாமாவாய்
நேசம் மிக்க மைத்துனனுய்
கபடமில்லா உங்கள் மனதை
என்றுதான் மறப்போமோ
உங்களைக் காக்க முடியாமல்
உண்டான கதியென்ன
சூடுபட்டு வீழ்ந்த போது
சூழ்ந்து நாம் நிற்கவில்லை
மயங்கிச் சரிகையிலே
மார்போடும் அணைக்கவில்லை
இனி உங்களைக் காண்பதற்கு
இப்புவியில் இடமில்லை
அழுது மனமோ ஆறவில்லை
அதை ஆற்றிடத்தானும் முடியவில்லை
இங்கிருந்து உங்களுக்காய்
இறைவனையே வேண்டுகின்றோம்.

சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள், சக நண்பர்கள்.

கோண்டாவில் கிழக்கு. (7033)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

**பொருள்:**

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று; நண்பர் நெறி கடந்து செல்லும் போது முற்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 892/2 நாவலர் வீதி　தொலைபேசி 24805
யாழ்ப்பாணம்　22073
17-10-1988　உ பெ இல. 88


## சப்பாத்துக்கு ஏற்றாற்போல காலை வெட்டும் கைங்கரியம்!

கட்டாய வாக்களிப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

அதாவது சகல வாக்காளர்களும் கட்டாயமாகத் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என நிர்ப்பந்திக்கப்படவும்—

தேர்தல் ஒன்றில் வாக்களிக்காதவருக்கு அபராதம் விதிக்கவும்—

வாக்காளர் ஒருவர் தாம் விரும்பிய வாக்களிப்பு நிலையத்தில் தமது வாக்கைச் செலுத்தவும்— உத்தேச கட்டாய வாக்களிப்புச் சட்டம் வகை செய்யும் எனவும் கூறப்படுகிறது.

சனநாயக உரிமைகளில் மிக முதன்மை வாய்ந்தது வாக்குரிமை, சனநாயகத்தை நிலைநாட்டுவதும் உறுதிப்படுத்துவதும் வாக்குரிமையே. மாண்பும், மகத்துவமும் மிக்க அந்த உரிமை சுதந்திரமானது. அந்த உரிமையைப் பயன்படுத்துவதும், பயன்படுத்தாமல் விடுவதும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது.

ஒருவர் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது அல்லது நிர்ப்பந்திப்பது வாக்குரிமையின் மாண்பைக் குறைப்பதும், அதனை மலிவுப் பொருள் ஆக்குவதுமாகும்.

ஒருவன், தான் விரும்பி வாக்குரிமையைப் பயன்படுத்துவது சுதந்திரமயமானது. கட்டாயப்படுத்தி, நிர்ப்பந்தித்து வாக்களிக்க வைப்பது பலாத்காரத்துக்கு ஒப்பானது. சனநாயக நெறிமுறை பிறழ்ந்த சர்வாதிகார— இராணுவ — முறை சார்ந்தது

ஆகவே கட்டாய வாக்களிப்பு என்பது சனநாயகத்துக்கு ஒவ்வாதது வாக்குரிமையைப் பயன்படுத்துவதா இல்லையா என்பதை முடிவு செய்யும் முதன்மையான உரிமையை மக்களிடமிருந்து பறிப்பதாகும். ஆகையால் அதனை சனநாயக விரோத, மக்கள் விரோத நடவடிக்கை என்று கூறுவதைவிட வேறு எந்தவிதமாகவும் கருதமுடியாது.

எனவே எந்தத் தேர்தலானாலும், சனநாயகத்தைப் பேணி, அதனை அடியொற்றி நடக்க வேண்டுமானால் கட்டாய வாக்களிப்புச் சட்டம் எதுவும் ஆகாது. சாதாரண உரிமைகளில் கைவைத்துக் களைத்த ஐ' தே க. அரசு, சனநாயகத்தின் ஆணி வேரான வாக்குரிமையிலேயே கைவைக்க முயல்வது கண்டிக்கப்படவேண்டியதாகும்.

அப்படி ஒரு முயற்சியில் அரசு இறங்கினால் அது இராணுவ அரசாட்சி முறையை நாடி நிற்கிறது என்பது நூற்றுக்கு நூறு நிருபணமாகும். சனநாயகத்தின் ஆணிவேரை அறுத்தால் மாற்றாக சர்வாதிகாரமும், இராணுவ ஆட்சி முறையும் அல்லாமல் வேறு என்ன மிஞ்சும்......?

தென் இலங்கையில் நடந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது. ஜே வி பி இயக்கம் மக்களை வாக்களிப்பதில் இருந்து தடுத்ததாகவும்—

அது போன்ற ஒரு நிலை ஜனாதிபதி தேர்தலில் நடக்காமல் தடுக்கவே — முறியடிக்கவே கட்டாய வாக்களிப்புச் சட்டம் குறித்து ஆராயப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

இதனை நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போவது என்று சொல்வதை விட, சப்பாத்துக்கு அளவாகக் காலை வெட்டும் முயற்சி என்று சொல்வதே நிரம்பவும் பொருத்தம்

வன்செயல்கள் நடக்கும்போது, அவற்றை அடக்குவதற்கென இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது. தேர்தல் நடத்துவது பொருத்தமாகாது. இராணுவச் சூழ்நிலையில் வாக்களிக்க எவரும் விரும்ப மாட்டார்கள். மக்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து வாக்களிக்க விரும்புவார்களா? அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் வாக்களிக்கவில்லை என்பதற்காக சட்டப்படி கட்டாயப்படுத்தி வாக்களிப்பிக்க முயற்சிப்பது துப்பாக்கி முனையில் வாக்களிக்கச் செய்வதற்குச் சமமாகும்.

வன்செயல்கள் தலை எடுத்தால், மேலோங்கினால் அவற்றைத் தணிக்க பேச்சுவார்த்தை, விட்டுக்கொடுத்தல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு வன்செயல் புரிபவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, உணர்ந்து கொண்டு, அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும். அதன் மூலம் வன்செயல்களை நீக்க வேண்டும்.

அதை விடுத்து, வன்செயல் புரிவோருடன் அரசு மோதிக் கொண்டு, அதேவேளை தேர்தலை நடத்தி, மக்களைக் கட்டாயப்படுத்தி, வாக்களிக்கச் செய்ய முயற்சிப்பது காலுக்குப் பொருத்தமாக சப்பாத்தை வெட்டித் தைக்காமல், சப்பாத்துக்கு ஏற்றாற் போல் காலை வெட்டும் படு முட்டாள் தனமான கைங்கரியமே அன்றி வேறில்லை.

## பர்மா அகதிகளுக்கு தாய்லாந்தில் இடமில்லை

பாங்கொக், அக். 16

பர்மா அகதிகளை தாய்லாந்து திருப்பி அனுப்பி விட்டது

பர்மாவில் இடம் பெற்றுவரும் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து பர்மாவில் இருந்து மாணவர்களும் குடிமக்களும் தாய்லாந்துக்கு அகதிகளாகச் சென்றிருக்கின்றனர்.

இந்தியாவுக்கு வந்த பர்மா அகதிகளுக்கு இந்திய அரசு தஞ்சம் அளித்திருக்கிறது.

ஆனால் தாய்லாந்து அரசு அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டது.

தங்கள் மண்ணில் தங்க அனுமதி வழங்கப்பட்டால அது பர்மாவுக்கும் தாய்லாந்துக்கும் இடையேயான உறவுகளைப் பாதித்து விடும் என்று பாங்கொக் அரசு அறிவித்திருக்கிறது.

[எ]

## நரபலி

புதுடில்லி, அக் 16

மூன்று சிறுவர்களை நரபலி கொடுத்ததுக்காக ஐவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

பூரி மாவட்டத்தில் மணிநாக் மலைத்தொடர் கிராமத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஒரு கோயிலில்வைத்து மூன்று சிறுவர்களும் கொல்லப்பட்டனர்.

(எ)

## நடவடிக்கை

புதுடில்லி, அக் 16

தலைமறைவு வாழ்க்கை நடத்தும் எய்ட்ஸ் நோயாளரைக் கண்டு பிடிக்க இந்திய அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

(எ)

## வத்திக்கான் அரசுக்கு நிதி நெருக்கடி

ரோம் அக் 16

வத்திக்கான் அரசுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது

பரிசுத்தபாப்பாண்டவரின் உத்தியோக அரசு அங்கு இயங்குகின்றது.

வத்திக்கான் திருச்சபை விடுத்திருக்கும் வேண்டுகோளில், உலகில் உள்ள ரோமன் கத்தோலிக்க மக்கள் இந்த நிதி நெருக்கடியைத் தீர்க்க உதவ வேண்டும் - என்று தெரிவித்துள்ளது. (எ)

## டிசம்பர் மூன்றும் வாரத்தில் பிரதமர் காந்தி சீன பயணம்

ஜம்மு, அக். 16

காஷ்மீர் மாநிலத்தில் இரண்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டுபிரதமர்ராஜீவ் காந்தி நேற்று புதுடில்லி திரும்பினார்.

அதற்கு முன்னர் திரு. காந்தி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

டிசம்பர் மூன்றும் வாரத்தில் சீனாவுக்குச் செல்ல உத்தேசித்திருப்பதாக பிரதமர் அப்போது தெரிவித்தார்.

அண்டை நாடுகளுடன் சீரான உறவு வைத்துக் கொள்ளவே இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்

(எ)

## ராமஜன்ம பூமி சம்பந்தமான அயோத்தி யாத்திரை ஒத்திவைப்பு!

புதுடில்லி, அக் 16

ராமஜன்ம பூமி பிரச்சினை தொடர்பாக உத்தரப் பிரதேசத்தில் அயோத்தியாவில் வெள்ளிக்கிழமை [14-10 88] ஆரம்பமாக இருந்த யாத்திரையை முஸ்லிம் மதஸ்தாபனங்கள் ஒத்தி வைத்து உள்ளன.

உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கின் வேண்டுகோளைத் தொடர்ந்து, அயோத்தி யாத்திரையைக் கைவிடுவதாக முஸ்லிம் மத ஸ்தாபனங்கள் அமைப்புநேற்று அறிவித்தன.

அயோத்தியில் பாப்ரா மசூதி இருக்கும் இடம் தான் ஸ்ரீராமபிரான் பிறந்த இடம் என்று இந்துக்கள் கூறிவருகின்றனர்.

அந்த இடம் முஸ்லிம்களுக்கு புனிதமான இடம் என்று முஸ்லிம் மதப் பிரமுகர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

[எ]

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல்

## காங்கிரஸ் தில்லுமுல்லு கருணாநிதி எச்சரிக்கை!

சென்னை, அக். 16

பென் ஜோண்சன் போன்று தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் தில்லுமுல்லு செய்வதைத் தடுக்க விழிப்புடன் செயல்படுக!

இப்படி தி மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

தி மு க. தலைவர் தனது வேண்டுகோளில் மேலும் கூறியிருப்பதாவது;

அண்மையில் ஒலிம்பிக்கில் ஒரு நிகழ்ச்சி ஏடுகளில் கண்டிருப்பாயே!

நூறு மீற்றர் பந்தயத்தில் வெற்றி பெற்றார் பென் ஜோண்சன்.

தடபுடல் மகிழ்ச்சி பாராட்டு. தங்கப் பதக்கம் பரிசு,

ஆனால் மறுநாள் வந்த செய்தி என்ன?

பந்தய விதி முறைகளுக்கு மாறாக அவன் போதை மருந்து அருந்தி தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டு போய் விட்டான் என்ற உண்மை தெரிந்தது. பதக்கம்பறிக்கப்பட்டது.

இன்று அவமானத்தால் தலைகுனிந்து நிற்கிறான்.

விதிகளையும்மீறுவோம் வெற்றியும் பெறுவோம். விஷயம் வெளியே தெரிந்தால அதிகாரத்தால் மறைப்போம் - அதற்காகத் தலைகுனியமாட்டோம்- என்பது இங்கே இந்திரா காங்கிரஸார் கடைப்பிடிக்கும் இலக்கணம்.

அதுவே ஜனநாயக முறை எனச் சாதிப்பர்.

எனவே ஜோன்சனைப் போலவே தேர்தல் பந்தயத்திடலுக்கு வருவர்!

ஜோன்சனைத் தாமதமாகப் பிடித்தது போலவே -பிறகு பார்த்துக் கொள்ளலாம் என எண்ணி ஏமாந்து விடக்கூடாது நாம். அதுதும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க முனைவதற்குச் சமம்!

இப்படி திரு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

(எ)

வெளி உலகில்

## சீன-சோவியத் உச்சிமாநாடு

பீகிங் அக் 16

கம்பூச்சியப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டால் மட்டுமே சோவியத்யூனியனுடனான உச்சி மாநாடு சாத்தியமாகும் என்று சீன அறிவித்துள்ளது.

சீனப் பிரதமர் வாங் ஷியாஸ் இதனை அறிவித்தார்.

அடுத்த வருடம் முற்பகுதியில் சோவியத்—சீன உச்சி மாநாடு நடைபெறும் என்று சீனவின் சிரேஷ்ட தலைவரான டெங்-ஷியா-பிங் முன்னர் தெரிவித்திருந்ததாக அறிவிக்கப்பட்டது. (எ)

## பங்களாதேஷில் இந்துக்களின் நிலை

அஹமதபாத், அக் 16

பங்களாதேஷில் இந்துக்கள் துன்புறுத்தப்படுகின்றனர்.

அவர்களைப்பாதுகாக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாரதிய ஜனதாக்கட்சி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

பிஜியிலும் இதே நிலைமை இருப்பதாகவும் பாரதிய ஜனதாக் கட்சி இந்திய அரசுக்குவிடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருக்கிறது.

(எ)

## மனோதத்துவ அடிப்படையில் எழுந்த நவராத்திரி விழா

### வழிபாட்டுஒழுங்கைமாற்றுவதுதேவையற்றது

கடந்த செவ்வாய் நவராத்திரி முதல் நாளன்று வெளியான உதயனில் அறிவுக்கே முதன்மை வேண்டும்' என்ற கட்டுரையில் 'முதல் மூன்று நாட்களையும் கல்வி நாயகிக்குரிய நாட்களாகவும் இடை மூன்று நாட்களையும் செல்வ நாயகிக்குரிய நாட்களாவும் கடைசி மூன்று நாட்களையும் வீர நாயகிக்குரிய நாட்களாகவும் கொண்டாடுவது குறித்து அறிஞர் உலகம் சிந்திக்க வேண்டும்' என்று புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் கேட்டுள்ளார்கள். இது வரவேற்கத்தக்கது; சிந்தனைக்குரியது; வந்தனைக்குரியது.

இங்ஙனம் புதிய முறையில் சிவராத்திரி விழாவைக் கொண்டாடுவதற்குக் காரணங்களையும் கட்டுரை ஆசிரியர் தந்துள்ளார். முதல் மூன்று நாட்களையும் துர்க்கை வழிபட்டிற்குரிய தினங்களாகக் கொண்டாடியதால் ஏற்பட்ட விளைவுகளை இந்த வழிபாடுடைய நாடுகளின் வரலாற்றை அறிந்து கொண்டால் தெரியும். அறிவுத் தெளிவு இல்லாததால், அறிவு நிலைகளை விட, உணர்வு நிலை முடிவுகளே மேலெழுகின்றன' என்று இக்கட்டுரையில் மேலும் விளக்கப்பட்டிருக்கின்றது.

இதுகாறும் உள்ள துர்க்கை, இலக்குமி, கலைமகள் வழிபாட்டு ஒழுங்கை நாம் மாற்ற முற்படும்போது, எமது முன்னோரின் இந்த மரபு வழிபாட்டில் ஏதோ காரணம் இருக்கத்தான் செய்கின்றது என்பதை நாம் மறந்து விடலாகாது. அறிவு, நூற்கல்வியால் மாத்திரம்பெறப்படுவதன்று இதற்கு மேலானது உள்ளொளி (Intution) இவ்வறிவையும் எமது குரவர்கள், தவத்தோர் பெற்றிருந்தனர்.

நவராத்திரி ஒன்பது இரவுகளும் முறையே வீரம், செல்வம், கல்வி என்பவற்றைக் குறித்து நிரைப்படுத்தப் பெற்றிருப்பது வெறும் சமய அடிப்படையிலன்று. இதை ஆழமாக ஆராயின் உளநூல தத்துவம் வெளியாகும்

**க. கயிலாயநாதன்**
சித்தன்கேணி கலாநிலைய முதல்வர்

உள்ளத்தின் இயல்பை ஆராய்ந்த மேனாட்டு அறிஞர்கள் இது முத்திறப்பட்டது என்று முடிவுகட்டினர். முதலில் உணர்ச்சிநிலை, (Feeling, — வீரம், அடுத்து விருப்பு நிலை (Willing) — அழகு. திரு. செல்வம். ஈற்றில் செயல்நிலை (Acting — அறிவு. கல்வி என வகுத்தனர்.

உள்ளத்தின் இந்த மூன்று இயல்பு நிலைகளை ஒழுங்காகக் கொண்டதே துர்க்கை, இலக்குமி' கலைமகள் வழிபாடு எனலாம் இந்தஒழுங்கில் எவ்வகைமாற்றமும் செய்யப்பெற்றால் இயற்கைக்கு முரணாகவே அமையும்.

உணர்ச்சி வயப்பட்டு தோன்றும் வீரத்தில், அறிவு முதலில் இடம் பெறாது. உதாரணமாக [illegible] குழந்தை ஒரு பாம்பைப் [illegible] உணர்ச்சி வசப்பட்டு, வீரம் பிறிட, அதைப் பிடித்து நெரித்துக் கொல்லவே முயலும் குழந்தையின் உள்ளம் முற்றிய நிலையிலேயே அறிவு செறிவாகி, அது பாம்பென முடிவு செய்யும். எனவே, முதலில் வீரமே, துர்க்கை வணக்கமே, இடம் பெறுவது இயற்கைவழிபாடாகும்.

மேலும், வீரம் என்பது கோழைத்தனமான போரையோ, கொலையையோ குறிப்பதன்று துர்க்கையைவழிபடுவது இக்கீழ்த்தரமான வீரத்தைப் பெறுவதற்கன்று.

வீரத்திலும் பேராண்மை ஒன்று உண்டு இராமாயணப் போரில், இராவணன், ''வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு'' இலங்கை புகுமுன், இராமபிரான் இவனைச் சுலபமாகக் கொன்றிருக்கலாம்ஆனால் இராமன் பேரருளாளன் இராவணனை நோக்கி, ''இன்று போய் நாளை நின் தானையோடு வா'' என்றார். இதையேவள்ளுவர் ''பேராண்மை'' என்று இக் குறளில்விளக்கியுள்ளார்.

''பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு''

வீரமானாலும், செல்வமானாலும் இவற்றைச் சரிவர அனுபவிக்க,பயன் பெற,கல்வி இன்றியமையாததே என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோமாட்டார். இதுவே [illegible] நவராத்திரி விழாவிற்குச் சிகரம் வைத்தாற் போன்று, கல்வி இறுதி மூன்றுநாட்களிலும் மகத்துவம்பெறுகின்றது.

இங்ஙனமாயின், கலைச் செல்வியின் இறுதி மூன்று நாட்கள் வழிபாட்டை முதல் மூன்று நாட்களுக்கும் தள்ளுவோமானால், இதுஅறிவின் உயர்வைக் கீழ இறக்குவதுபோன்ற தன்றோ! (உ)

### கலைவிழா ஒத்திவைப்பு

யாழ். கரம்பை அமெரிக்க மிசன் தமிழ் வித்தியாலயத்தில் நாளை நடைபெறவிருந்த கலைவிழா 3 ஆம் தவணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அரசாங்க பாடசாலைகள் எதிர்வரும் 24ஆம் திகதி வரை மூடப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட உத்தரவை அடுத்து கலைவிழாவை ஒத்திவைப்பதுஎன பாடசாலை கலை வாணி மாணவர் மன்றமும், அபிவிருத்திச்சபையும் முடிவு செய்திருக்கின்றன.

### தமிழ்-சிங்கள நட்புறவுக் கழகம்

மட்டக்களப்பில் அண்மையில் தமிழ்—சிங்கள நட்புறவுக் கழகம் என்ற அமைப்பினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் ''தமிழ்-சிங்கள மக்களை கொன்று குவிக்காதே!' ''அப்பாவி இளைஞர்களை கைது செய்யாதே!' ''கைது செய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய்'' போன்ற கோரிக்கைகள் இடம் பெற்றுள்ளன. (இ 21)

### மிருதங்க பண்ணிசை வகுப்புக்கள்

உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலயத்தில் மிருதங்க வகுப்புகளும், பண்ணிசை வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்த வகுப்புக்களை மேற்படி ஆலயத்தின் 'சிவஞான வாரிபம்' கலாசாரப் பணி மன்றம் ஆரம்பித்து நடத்தஉள்ளது. (இ-9)

## கல்வியும் செல்வமும் வீரமும் நல்குவாய்!



**கல்வி**

அறிவும் ஆற்றலும் அகமனப் பான்மையும்
செறிவும் அனுபவத் திறன்களும் சீர்மையும்
நெறியில் நிற்றலும் நிலைபெறு தூய்மையும்
பொறிகள் ஒன்றவே கல்வியைப் புகட்டுவாய்

**செல்வம்**

அழிவு அற்றநல் ஆக்கம் மலரவும்
ஒழிவு அகற்றிய ஊக்கம் ஓங்கவும்
பழிகள் இன்றிய தொழில்கள் வளரவும்
வழிகள் திறக்கவே வளங்கள் பெருக்குவாய்

**வீரம்**

உண்மை நேர்மை உறுதியில் நிற்கவும்
இன்மை என்றதோர் இழிநிலை போக்கவும்
எண்ணம் சொல்செயல் தியாகம் முந்துற
திண்மை பெருகவே திறலினை நல்குவாய்

நயினைக் கவிஞர்,
நாக.சண்முகநாதபிள்ளை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கைலாஸ்
பயோரியா பற்பொடி
இப்பற்பொடி பல்வலி, பற்கூச்சம், முரசு கரைதல், பல்சொத்தை, பயோரியா, பல்சிழ்வடிதல், பல் ஆட்டம் முதலிய பல் வியாதிகளைக் குணப்படுத்தும்.
கிடைக்குமிடம்:
க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்,
மருந்துச் சரக்கு வியாபாரம்,
5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

17 - 10 - 1988 திங்கட்கிழமை

கைலாஸ்
சிரங்கு எண்ணை
சொறி, சிரங்கு, புண், நீர்ச்சிரங்கு, கரப்பன், தேமல் முதலிய வியாதிகளுக்குச் சிறந்தது.
க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்,
மருந்துச் சரக்கு வியாபாரம்,
5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.

★ யாரை ஏமாற்றப்பார்க்கிருர் பிரேமா?

## ஒப்பந்தத்திற்கு பதிலாக நட்புறவு உடன்படிக்கையா?

### சாத்தியமற்றது என்கிருர் சிறிமா

கொழும்பு, அக் 17

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பதிலாக நட்புறவு உடன்படிக்கை அமைய முடியாது என்று சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

கொத்மலையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது:-

நட்புறவு உடன்படிக்கை என்பது இரு நாடுகளுக்கு இடையேயான இரு தரப்பு விஷயங்கள் பற்றியதாக இருக்கும். ஆனல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுகின்றது.

நட்புறவு உடன்படிக்கை என்று பிரதமர் பிரேமதாஸ சொல்வது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடனை இணைப்புக்கு பதிலாக அமையுமே ஒழிய, ஒப்பந்தத்திற்கு மாற்றாக அல்ல.

இந்த நிலையில் நட்புறவு உடன்படிக்கை என்பது ஒப்பந்தத்துக்கு மாற்றாக எப்படி அமைய முடியும்?

யாரை முட்டாளாக்க பிரதமர் எத்தனிக்கிருர்?

எப்படியிருப்பினும் தேர்தலுக்கு முன்னர் இந்தியாவுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றை இவர்கள் ஏன் உருவாக்க முடியாதுள்ளது?

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்வது பற்றி பிரதமர் மௌனஞ் சாதிக்கிருர்.

தான் ஜனதிபதியாக வந்தால் அமைதிப் படையை திருப்பி அனுப்பப்போவதாகக் கூறும் பிரதமர் இப்போதே திருப்பி அனுப்பலாமே!

இப்போது பிரதமராகவும் ஜனதிபதி வேட்பாளராகவும் இருக்கிற திரு. பிரேமதாஸாவால் இதைச் செய்ய முடியாதா?

-இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (உ-எ)

## 2 ஆவது பிறந்த நாள்

### செல்வன் தினேஷ்

நாச்சிமார் கோயிலடி 521/1 கே. கே. எஸ். வீதியில் வசிக்கும் திருமலைராசா வனிதா தம்பதிகளின் அன்புப் புதல்வன் தினேஷ் இன்று 17 - 10 - 88 இல் இரண்டாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிருர்.

இவரைப் பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, உற்ருர், உறவினர், நண்பர்கள், வாழ்த்துகின்றனர்.

(7272)

## IMMEDIATE VACANCIES

### IN SAUDI ARABIA

(1) Mechanical Engineer — Negotiable
இயந்திரப் பொறியியலாளர்

(2) Electrical Supervisor — Negotiable
மின்சார மேற்பார்வையாளர்

(3) Mechanical Supervisor — Negotiable
இயந்திரவியல் மேற்பார்வையாளர்

(4) Plumber — Negotiable
குளாய் பொருத்துனர்

(5) Boiler Technician — Negotiable

(6) Maintenance Cleaners — 450 S. R.
பராமரிப்பு சுத்திகரிப்பாளர்

(7) University Cleaners — 456 S. R.
கலாசாலை சுத்திகரிப்பாளர்

(8) Hospital Cleaners — 400 S. R.
ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்

(9) Hospital Lady Cleaners — 456 S. R.
ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர்
(பெண்கள்) வயது 30 - 42

(10) Catering Lady Waiters — 650 S. R.
வயது 30 — 42

SAUDI OPERATION & MAINTENANCE CO. LTD.

T. V. TRAVELS & TOURIST
(Railway Station front)
Brown Road,
KOKUVIL.

(C 611)

பாடசாலைகள் இயங்காத போதிலும்

## வாணிவிழா, பரிசளிப்பு போன்றவற்றை நடத்த முடியும்

### கல்விப்பணிப்பாளர் அனுமதி பெற்றுர்

யாழ்ப்பாணம் அக். 17

இவ்வாரத்தில் பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடாகி இருந்த வாணிவிழாக்கள், பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என்பன பாடசாலைகள் இயங்காத போதிலும் எதுவித தடங்கலுமின்றி நடைபெற அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரத்தை அண்மையில் கல்வி அமைச்சில் யாழ்மாவட்டக் கல்விப் பணிப்பாளர் வெற்றிவேலு சபாநாயகம் பெற்றுள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளை இம்மாதம் 25ஆம் திகதி வரை மூடும்படி அரசு உத்தரவிட்டதை அடுத்து சில பாடசாலைகள் இந்த நாட்களில் திட்டமிட்டிருந்த வைபவங்களை ஒத்திவைக்கும் நிலையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## பாடசாலைகளை...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைகளுக்குத் தோற்றும்மாணவர் பெரிதும் பாதிப்புற்றிருப்பதாகவும் —

அதுதொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் கல்விப்பணிப்பாளர் அதிக அக்கறை கொண்டிருக்கின்ருர் என்றும் யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தெற்கில்நடைபெற்று வரும் கலவரங்கள், மாணவர் ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து சகல பாடசாலைகளையும் மூடும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே.

இந்த உத்தரவினல் பெரும் நெருக்கடி ஏதுமின்றி ஒழுங்காக இயங்கிவந்த வடபகுதிப் பாடசாலைகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. (உ)

## நாடு திரும்பிய அகதிகள் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், அக் 17

நேற்று முன் தினம் சனிக்கிழமை இந்தியாவிலிருந்து நாடுதிரும்பிய அகதிகள் 504 பேரும் அன்றிரவே யாழ் நகருக்கு அழைத்து வரப்பட்டு நேற்று தத்தமது இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சனிக்கிழமை இரவு யாழ் இந்துக் கல்லூரியில் இவர்கள் தங்கவைக்கப்பட்டனர். இதனையடுத்து யாழ் இந்துக் கல்லூரியைச் சூழவுள்ள பகுதியில் இந்தியப் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டன.

இந்த அகதிகளுக்கான நிவாரணப் பணம் 2 ஆயிரம் ரூபாவும் நிவாரணப் பொருட்களும் ஸ்ரீலங்கா படையினரின் அடையாள அட்டையும் அங்கு வைத்து வழங்கப்பட்டன. (உ-9)

## காலையில்...,..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ராஜினமாச் செய்ததாக ஹரியான அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு.தேவிலாலின்ராஜினமா நாடகம் ஒன்பது மணித்தியாலங்கள் நீடித்தன.

ஜனதா தள் தலைவர் வி.பி.சிங் தேவிலாலுடன் பேச்சுக்கள் நடத்தியபின்னர், அவர்ராஜினமாவை வாபஸ் பெற்றுகொள்ளும் முடிவை அறிவித்தார். (உ-எ)

ஷார்ஜா கிரிக்கெட்:

## மேற்கிந்திய அணியை இந்தியா வென்றது

### ஸ்ரீகாந்த் சிறப்பு வீரராகத் தெரிவு

ஷார்ஜா, அக் 17

நேற்று ஆரம்பமான ஷார்ஜா கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இந்திய அணி முதலாவது வெற்றியைப் பெற்றது.

50 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட போட்டியில் இந்திய அணி 23 ஓட்டங்களினல் மேற்கிந்திய அணியைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 239 ஓட்டங்களைப் பெற்றது. தமிழக வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீ காந்த் பிரமாதமாகத் துடுப்பெடுத்தாடி ஆறு ஸிக்ஸர்கள் உட்பட 112 ஓட்டங்களை பெற்ருர் இந்திய அணியின் தலைவர் திலிப் வெங்சாகர் ஆட்டமிழக்காமல் 76ஓட்டங்களைப்பெற்ருர்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணியினர், இந்திய வீரர்களின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 215 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

சஞ்சய் சர்மா 5 விக்கெட்டுகளை வீழ்த்திஞர் கிர்வானி 4 விக்கெட்டுக்களையும் கபில்தேவ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

''செஞ்சுரி'' அடித்த கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் இந்தப் போட்டியின் சிறப்பு ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (உ-எ)

Science Accademy
Nallur
Personal Class
89
Pure, Applied
By DHEEPAN
மொத்கல்,
நுண்கணிதம்
அடுத்த வகுப்பு:
புதன் 4.30
(7271)

## எட்டுக் கட்சி,...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

★ லிபரல் கட்சி

இக் கூட்டணியின் கூட்டம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே அதிகாரப்பரவலாக்கல் குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

அதிகாரப் ரவலாக்கல் பற்றி இந்த அரசியல் கட்சியின் பூரணமான புதிய நிலைப்பாட்டில் சிந்தித்து வருகின்றன

இதுவரை காலமும் பிரேரிக்கப்பட்ட பாதையை விடுத்து புதிய வழியில் சிந்தனை செல்கிறது.

வடக்கு - கிழக்கு 'இணைப்பு' அமைதி உடன்பாடு, மாகாண சபைகள் ஆகிய பதங்கள் உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றன. அவற்றைக் கைவிட வேண்டியேற்பட்டுள்ளது.

இப்போது உருவாகிவரும் சிந்தனைகள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில வழங்கப்பட்டதிலும் பார்க்க அதிகமானவை

இலங்கை - இந்திய ஒப்பந்தம் சிங்கள மக்களாலோ அல்லது தமிழ் மக்களாலோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுதான் எமது நிலைப்பாடு

அதிகாரப்பரவலாக்கலின் யூனிட், அது உள்ளடக்கிய விஷயங்கள் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தைப் பிரதிபலிக்கின்றன. பண்டா - செல்வா ஒப்பந்தம் ஓர் ஆரம்பமே.

ஆனல் தற்போதுநாம் நடத்திவரும் பேச்சுக்கள் பண்டா - செல்வநாயகம் ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களுக்கும் அப்பால் போய்விட்டன.

காணிப்பிரச்சினை குறித்து ஏற்கனவே பேசப்பட்டாயிற்று. மூன்று இனங்களுக்கு முக்கியமானது இப்பிரச்சினை. இதற்குத் தீர்வு காணப்படுவதற்கு முன்னர் நீண்ட பேச்சுக்களை நடத்தவேண்டியிருக்கும்.

அடுத்த பிரச்சினை சட்டம் - ஒழுங்குபற்றியது.

—இப்படி திரு. குமார் பொன்னம்பலம் சொன்ஞர். (உ-எ)

## இளைஞர்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

த்த காயமடைந்த அவர் பின்னர் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு நண்பகல் ஒரு மணியாவில் சத்திர சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்படுகையில் அவர் மீது ஒருவர் பின் பக்கத்திலிருந்து கத்தியால் குத்திஞராம் அதன் காரணமாக அவரின் தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது.

பின்னர் மாலை 4 30 மணியளவில் சத்திர சிகிச்சை முடிந்து வார்ட்டிற்கு இவர் எடுத்து வரப்படும் போது மீண்டும் கத்திக் குத்துக்கு அவர் இலக்காஞர் இந்த சம்பவத்தில் அந்த இளைஞரும் அவரது சகோதரியும் காயமடைத்தனர்.

இந்த சம்பவங்களை அடுத்து அந்த இளைஞர் அவரதுஉறவினர்களால் நேற்று மாலையில் யாழ் வைத்தியசாலையில் இருந்து வேறிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். (உ-9)

## மரண அறிவித்தல்கள்

### காலிங்கர் செல்லத்துரை

காலிங்கர் செல்லத்துரை 16-10-88 அன்று காலமாஞர். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், மகாலட்சுமி, கனகலிங்கம் (சுவிஸ்), தர்மலிங்கம்(ஜேர்மனி), சோதிலிங்கம்[சுவிஸ்), நடேசலிங்கம் (கனடா), ஜெயலட்சுமி (ஜேர்மனி), விசயலட்சுமி (ஜெர்மனி), புஸ்பராணி, அன்னலட்சுமி (கனடா), ஞானலட்சுமி (சைவ மகாஜன வித்தியாலய மாணவி), நளாயினி (சைவ மகாஜன வித்தியாலய மாணவி] ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரசாமி.சரோசினிதேவி(சுவிஸ்), சிவசுப்பிரமணியம்(ஜெர்மனி), கதிர்காமராசா (ஜெர்மனி), சர்வேஸ்வரன், புஸ்பநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேம்.

ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;-
திருமதி செ. கனகம்மா

காரைக்கால், சிவன்கோவிலடி,
இணுவில். (7274)

### திரு. விஜயசிங்கம் அல்பேட்

உடுவில் லவ்லேனைச் சேர்ந்த திரு விஜயசிங்கம் அல்பேட் (ஓய்வுபெற்ற யாழ் விற்பனைத் திணைக்கள சாரதி) 14-10-88 (வெள்ளிக்கிழமை) அன்று கொழும்பில் காலமாஞர். இவர் காலம் சென்ற குணமணியின் (குணம்) அன்புக் கணவரும் சந்திரசேகரம்(ஆசிரியர்,கொழும்பு) ஸ்ரீரஞ்சினி (தொலைத் தொடர்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஸ்ரீரஞ்சன் (Lanka Ceme-Ltd காங்கேசன் துறை), கீதாஞ்சலி (Ford Rhodes Thoranten & Co. Colombo), விஜயா (Sharma & Co. Jaffna), ஜெயரஞ்சன், விஜயரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நாகலிங்கம் மஞ்ஞெண்மணி (குப்பிளான) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார். ஈமக்கிரியைகள் 15-10-88 சனிக்கிழமை தலவத்துக்கொட மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ஸ்ரீரஞ்சன்

லவ்லேன்,
உடுவில். (7276)

### சிங்கராசா சந்திரன்

சிங்கராசா சந்திரன் 16-10-88 அன்று அகாலமரணமாஞர். இவர் சிங்கராசா (முன்னுள் றே. க. த. பாடசாலை அதிபர்) பரிபூரணம் ஆகியோரின் மகனும், செபநேசன் (ஜேர்மனி), குணநேசன், சந்திரகாந்தா (சாந்தி) சந்திரவதனி ஆகியோரின் அண்ணனும் ஆவார், அன்னரின் பூதவுடல் சென்.மைக்கல் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும் இதை உற்ருர் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

தகவல்:
S. குணநேசன்

(7315)

### சின்னத்தம்பி கந்தையா

சின்னத்தம்பி கந்தையா (கரவெட்டி என்று செல்லமாக அழைக்கப்படுபவர்) அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர் (16-10-88)இல் காலமாஞர். அன்ஞர் ஞானம்மாவின் அன்புக் கணவரும், கிருபாமலர், சிவசோதி (ஜெர்மனி), அகிலாண்டேஸ்வரி (ஆசிரியை திருவையாறு அ. த. க. பா.), சர்வேஸ்வரி, வாமதேவன், தவனேஸ்வரி (பிரான்ஸ்), செல்வகுமார் (தொலைத்தொடர்புத்திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தகப்பஞரும், செந்தில்நாதன் (நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம்) காலஞ்சென்ற பரமேஸ்வரன் (ஜெர்மனி), கணபதிப்பிள்ளை (C. T. B. காரைநகர்) சற்குணராசா (பிரான்ஸ்), நித்தியகலாரஞ்சினி, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமஞரும் முகுந்தன், அகிலன், பாபு, விஜி, சஜி, பபா, துளசி, பிரசாத், கோபி, பிரபா, அபிராமி, கௌசல்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்ஞரின் ஈமக்கிரியைகள் 17-10-88 காலை 11-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
K. செல்வகுமார்

(7314)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 17th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org